இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அன்றே இயேசுவின் சீடருள் பலர் அவரை விட்டு விலகினர். அன்று முதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை. இயேசு பன்னிரு சீடரிடம், “நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா?” என்று கேட்டார். சீமோன் பேதுரு மறுமொழியாக, “ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. நீரே கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை நாங்கள் அறிந்துகொண்டோம். அதை நம்புகிறோம்” என்றார். (யோவான் 6:66-69)

# தமிழக வேளாங்கண்ணியில் அன்னையின் திருக்காட்சிகள் வத்திக்கான் அங்கீகாரம் பெற்றன

**வத்திக்கான்:** தமிழகத்தின் வேளாங்கண்ணியில் செப்டம்பர் 8ஆம் தேதி சிறப்பிக்கப்படவிருக்கும் ஆரோக்கிய அன்னை திருவிழாவை முன்னிட்டு தஞ்சாவூர் ஆயர் சகாயராஜ் தம்புராஜ் அவர்களுக்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது விசுவாசக் கோட்பாடுகளுக்கான வத்திக்கானனின் திருப்பீடத்துறை.

வேளாங்கண்ணியின் ஆரோக்கிய அன்னை திருத்தலத்தில் 16ஆம் நூற்றாண்டு முதல் சிறப்பிக்கப்படும் இந்த பக்தி கொண்டாட்டங்கள், 16ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த மூன்று புதுமைகளினால் இங்கே ஆரோக்கிய அன்னையின் பக்தி பரவலாயிற்று. அம்மூன்று புதுமைகள்: இடைய சிறுவனுக்கு காட்சி தந்தது, தயிர் விற்ற முடவனுக்கு கால் நலமடைந்தது, போர்த்துகீசிய மாலுமிக்கு கடும் புயலில் கரை வந்தடைய உதவியது ஆகும்.

மேற்கண்ட அன்னை மரியாவின் திருக்காட்சிகள் அன்னை மரியா ஏழை மற்றும் நோயுற்ற சிறாரை நேரடியாக சந்தித்ததை பறைசாற்றி நிற்கின்றன எனும் உண்மையை ஏறக்குறைய 400 ஆண்டுகளுக்குப் பின், பல ஆய்வுகளின் பலனாக வத்திகான் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்துள்ளதாக தஞ்சாவூர் ஆயர் சகாயராஜ் தம்புராஜ் அவர்களுக்கு செய்தி ஒன்றை அனுப்பியுள்ளது விசுவாசக்கோட்பாடுகளுக்கான வத்திக்கான் திருப்பீடத்துறை.

லூர்து நகரில் தன்னை வெளிப்படுத்திய அன்னை மரியா வேளாங்கண்ணியிலும் ஆரோக்கிய அன்னையாக வெளிப்படுத்தியதை கௌரவிக்கும் விதமாக, 2002ஆம் ஆண்டு உலக நோயாளர் தினத்தை வேளாங்கண்ணியில் சிறப்பிக்க புனித திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்கள் தீர்மானித்ததையும் இந்த செய்தியில் வத்திக்கான் குறிப் பிட்டுள்ளது.



தமிழகத்தின் வேளாங்கண்ணி திருத்தலம்

உடல் நலத்தை மட்டுமல்ல, ஆன்ம நலத்தையும் மரியன்னை திருத்தலங்களில் பெறுகிறோம், ஏனெனில் அன்னை மரியாவின் திரு உருவம் குறித்து தியானிக்கும்போது, நம் கவலைகளை அகற்றி நமக்கு அமைதியைத் தரும் இயேசுவின் அன்பை கண்டுகொள்கிறோம் எனவும் அச்செய்தி மேலும் கூறுகிறது.

அன்னை மரியாவின் கையிலிருந்த குழந்தைக்கு ஏழை சிறுவன் தன் கையில் வைத்திருந்த பசும்பாலை வழங்கியது, நாமும் ஏழைகள் மீது அக்கறையுடன் செயல்படவேண்டும் என்பதை குறித்து நிற்கிறது என உரைக்கும் இச்செய்தி, கடல் புயலிலிருந்து காப்பாற்றப்பட்ட போர்த்துக்கீசிய மாலுமிகள் வேளாங்கண்ணியில் ஒரு கோவிலைக் கட்டியதும், வேளாங்கண்ணி திருத்தலக்கோவில் 2004 சுனாமியிலும் சேதமடையாமல் இருந்ததையும் சுட்டிக் காட்டுகிறது.

விசுவாசத்துடன் வேளாங்கண்ணி திருத்தலத்திற்கு வரும் திருப்பயணிகள் பெறும் ஆன்மீகக் கொடைகள் குறித்தும், கிறிஸ்தவர்கள் அல்லாத வேறு மதத் திருப்பயணிகளும் பயன்பெற்றுவருகிறார்கள் என்பதையும் குறிப்பிடும் இச்செய்தி, தூய ஆவியாரின் அருள் இங்கு செயல்படுவதைக் காணமுடிகிறது எனவும், கத்தோலிக்க திருஅவையின் அருளடையாளங்களை பெறமுடியாதவர்களுக்கு இயேசுவின் தாயாம் அன்னை மரியாவின் ஆறுதல் மறுக்கப்படுவதில்லை என்பதற்கு சான்றாக இவ்விடம் உள்ளது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உடல் நலத்தை மட்டுமல்ல, ஆன்ம நலத்தையும் மரியன்னை திருத்தலங்களில் பெறுகிறோம்**

இந்த வேளாங்கன்னி ஆலயமானது பெருங்கோவிலாக (மைனர் பசிலிக்காவாக 1962-ல் அறிவிக்கப்பட்டது என்பது குறிபிடத்தக்கது. தஞ்சாவூர் சுற்றுலா இணையதளத்தின்படி, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 மில்லியன் திருப்பயிணிகள் இத்திருத்தலத்திற்கு வருகை தருகின்றனர், அவர்களில் 3 மில்லியன் பேர் ஆகஸ்ட் 29 முதல் செப்டம்பர் 8 வரை கொண்டாடப்படும் திருவிழாவின் போது வருகை தருகின்றனர் என்றும் அறிகிறோம்.

# அலோர் காஜா பங்கில் புனித அன்னா திருவிழா கொண்டாடம்

**அலோர் காஜா, மலாக்கா:** இங்குள்ள சிற்றாலயத்தில் புனித அன்னா (அன்னமாள்) ஆண்டு பங்குத் திருவிழாக் கடந்த ஜூலை 25 தொடங்கி 28 வரை ‘கடவுளின் அன்பைக் கொண்டாடுதல்’ எனும் முதன்மை கருப்பொருளில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மலாக்கா புனித சவேரியார் பங்குத்தந்தையும் இச்சிற்றாலயத்தின் நிர்வாகியுமான அருள்பணி மோசஸ் இராயப்பன் அவர்கள் இத்திரு விழா திருப்பலிகளுக்குத் தலைமையேற்று ஆங்கிலத்திலும் தமிழிலும் மறையுரையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அருள்தந்தையின் மறையுரைகள் ‘ஒன்றித்துப் பயணித்தல் மற்றும் உள்ளத்தோடு செவிமடுத்துல்’ ஆகிய துணை கருப்பொருள்களில் மையமிட்டிருந்தன. மேலும், கடந்த ஜூலை 26 அன்று நோயாளிகளுக்கான சிறப்பு குணமளித்தல் வழிபாட்டையும் நிறைவேற்றினார்.

ஜூலை 26 அன்று, விழா திருப்பலியில் ஏறக்குறைய ஆயிரம் பேர் உள்ளூரிலிருந்தும், அக்கம் பக்கதிலிருந்துமாக கலந்துகொண்டனர் என்றும் தொடர்ந்து ஜூலை 28 அன்று ஆங்கிலத்தில் கொண்டாடப்பட்ட திருப்பலியில் ஏறக்குறைய 500 பேர் பங்கேற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. நிறைவாக, பங்குத்தந்தை விழா ஏற்பாட்டுக்கு குழுவிற்கும், மலாக்கா புனித சவேரியார் பங்கின் பாடற்குழுவிற்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.



*அருள்பணி மோசஸ் இராயப்பன் அவர்கள் இறைமக்கள் மீது தீர்த்தம் தெளிக்கிறார்*

தமிழாக்கம்: ஆர்.கே.

# கேரளா, வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு காரித்தாஸ் உதவி!

கேரளாவிலுள்ள வயநாட்டில் நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால மறுவாழ்வு உதவிகளை இந்திய காரித்தாஸ் அமைப்பு வழங்கி வருகின்றது என்று அதன் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாகக் கூறியுள்ளது யூகான் செய்தி நிறுவனம்.



உடனடி மற்றும் நீண்ட கால நடவடிக்கைகளுடன் மறுவாழ்வுக்கான உதவிகளை செய்வதில் நாங்கள் இப்போது அதிக கவனம் செலுத்தி வருகிறோம் என்று கேரளாவில் உள்ள இந்திய காரித்தாஸ் அமைப்பின் திட்ட உதவியாளர் ஆயர் அந்தோணி அவர்கள் ஆகஸ்ட் 14, அன்று அச்செய்தி நிறுவனத்திடம் கூறியதாகவும் உரைக்கிறது.

ஜூலை 30, செவ்வாயன்று நிகழ்ந்த இந்த இயற்கைப்பேரிடற்குப் பிறகு, மானந்தவாடி, சுல்தான் பத்தேரி மற்றும் கோழிக்கோடு மறைமாவட்டங்களைச் சேர்ந்த தங்கள் துணையாளர்கள், மீட்புப் பணிகளில் உதவவும், மறுவாழ்வுக்கான உதவிகளை வழங்கவும் மேப்பாடி வனப்பகுதிக்கு விரைந்தனர் என்றும் அச்செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார் ஆயர் அந்தோணி.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

## புனித யோவான் இலாத்தரன் பேராலயம் (திருஅவையில் யூபிலி ஆண்டு 2025)



ஆலயங்களுள் சிறந்த ஆலயமாக அகில உலகில் இருக்கக்கூடிய ஆலயங்களுக்குள் எல்லாம் சிறந்த ஆலயமாக விளங்கக்கூடிய புனித யோவான் இலாத்தரன் பெருங் கோவிலானது உரோமில் உள்ள நான்கு பெருங்கோவில்களுள் ஒன்றாகும்.

கி.பி.313ஆம் ஆண்டில் மன்னன் கான்ஸ்டாண்டைன் கிறிஸ்தவ மக்களுக்கு வழிபாட்டு உரிமையை வழங்க விரும்பி இவ்விடத்தில் அவர்களுக்கான ஆலயம் ஒன்றைக் கட்ட விரும்பினார். 90 மீட்டர் நீளமும் 50 மீட்டர் அகலமும் கொண்டு கான்ஸ்டன்டைன் மன்னரால் கட்டப்பட்ட அவ்வாலயமானது கி.பி.318 ஆம் ஆண்டில் திருத்தந்தை சில்வேஸ்தரால் திருநிலைப் படுத்தப்பட்டு 'இயேசு மீட்பராலயம்' என அழைக்கப்பட்டது

இவ்வாலயத்தின் வெளித்தோற்றமானது திருத்தந்தை 3ஆம் கிளமன்ட் அவர்களின் கட்டளையின்பேரில் 1732 ஆம் ஆண்டு

# தீபகற்ப மலேசிய வட்டார திருஅவையின் பேரவை 2024

## ஆயர்களின் எதிர்ப்பார்ப்பும் பிரதிபலிப்பும்

### தொடர் விளக்கக் கட்டுரை

ஆகஸ்ட் 25, இன்று தொடங்கி ஆகஸ்டு-27 வரை மூன்று நாள்களில் ஜொகூர், பிளெந்தோங்கில் உள்ள மஜொடி மையத்தில் விறுவிறுப்பாக நடைபெறும் தீபகற்ப மலேசியா திருஅவையின் மேய்ப்புப் பேரவை 2024-க்கு பேராயர் ஜூலியன் லியாவ், கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் மற்றும் ஆயர் பெர்னர்ட் போல் ஆகியோர் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய தங்கள் எதிர்ப்பார்ப்புகளையும் பிரதிபலிப்புகளையும் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் முன்னோக்குகள் RPA2024 இன் பரந்த பயணத்தைக் கடத்து 2026-ல் நடைபெறும் மலேசிய ஆயர் மாநாடு 2026 (MPC2026) நோக்கிய விவரிப்பாக உள்ளன. இது சபா, சரவாக் மற்றும் தீபகற்ப மலேசியா கத்தோலிக்க திருஅவையின் ஒன்றிப்பை நோக்கிய பயணமாக நடைபெறுகிறது என்றால் மிகையாகாது.

#### திருஅவை இளையோருக்கான தூரநோக்கு

கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் திருஅவைக்கான தமது எதிர்நோக்கைப் பகிர்ந்துகொண்டார். இவர் திருஅவையின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்களின் ஈடுபாடு குறித்து கருத்துரைத்தார். தீபகற்ப மலேசியா திருஅவையின் மேய்ப்புப் பேரவையில் (2024) குடும்பம், திருஅவை, சூழலியல் மற்றும் சமூகம் - ஆகிய நான்கு பிரிவுகளில் விவாதிக்கப்பட வேண்டிய அம்சங்களையொட்டி பகிர்ந்துகொண்டார். "தீபகற்ப மலேசியா திருஅவையின் எதிர்காலம் அதன் இளையோர் வசம் உள்ளது" என்று கூறிய அவர், இளைஞர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கும் அதிகாரம் அளிப்பது திருஅவையின் எதிர்காலத்திற்கு இன்றியமையாதது என்றார்.

#### கூட்டொருங்கியக்கமும் தீபகற்ப மலேசிய வட்டார திருஅவை பேரவையும் 2024

பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர் கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் உள்ளூர் நிலையிலிருந்து உலகளாவிய திருஅவை வரையிலான திருஅவையின் பயணத்தை யொட்டி விவரித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆயர் பேரவைக்கு விடுத்த அழைப்போடு மலேசிய ஆயர்களின் மலேசிய திருஅவை மேயப்பு 2026 பேரவையோடு, ஒன்றித்த சீரமைப் பைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். "கொண்டாடுதல்-செவிமடுத்துல்-பயணித் தல்' ஆகிய அம்சங்களைத் தழுவிய சீரமைப்பானது இன்றுமில்லாமையிலிருந்து அல்ல, மாறாக நடைமுறையில் இருக்கும் செயல்பாடிடலிருந்து தொடங்குகிறது என்று விளக்கினார்.

#### மறைத்தூதுக்கான அழைப்பு

மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் பெர்னர்ட் போல், விரக்தி மற்றும் பொருத்தமற்ற உணர்வோடு அடிக்கடி போராடும் உலகில் நம்பிக்கை மற்றும் ஒளியின் ஆதாரமாக திருஅவை இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத் தினார். 'தீபகற்ப மலேசிய வட்டார திருஅவை பேரவை' என்பது உள்ளூர் தேவாலயத்திற்கான கடவுளின் விருப்பத் தைத் தேடுவதற்கும், பங்குகளுக்குமாக தூய ஆவியானவர் சொல்வதைக் கேட்பதற்கும் முன்னேறுவதற்கான ஒரு வழியாகும்" என்று அவர் விளக்கினார்.

ஆயர் பெர்னர்ட் போல், 'தீபகற்ப மலேசிய வட்டார திருஅவை 2024 பேரவையை RPA2024) தூய ஆவியானவருக்கு செவி சாய்க்கவும், திருஅவையின் மேய்ப்புப்பணி தேவைகளுக்கு நம்பிக்கையுடனும் தைரி யத்துடனும் பதிலளிக்கும் வாய்ப்பாக பார்க்கிறார். தூய ஆவியின் தூண்டுதலுக்கு பங்கேற்பாளர்களைக் கவரும் "ஆவியில் உரையாடல்" (CIS) செயல்முறையின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைத்தார். திருஅவைக்கான அவரது பார்வை அதன் நற்செய்தி அறிவிப்புப் பணியுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று மேலும் விவரித்தார்.

ஆர்.கே.

# நிலைவாழ்வுக்கான உணவு ஆண்டவரே!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 21-ம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். இன்றைய வாசகங்க்ள வாயிலாக நாம் முடிவெடுக்கும் திறமை குறித்து சிந்திக்க அழைக்கப்படுகி றோம். முடிவெடுக்கும் திறனானது மனிதக் குலத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவன் தொடர்ந்து பல்வேறு அறிகுறிகள், அற்புதங்கள் வழியாக தன்னை உண்மைக் கடவுளாக வெளிப்படுத்திய போதும், இஸ்ராயேல் மக்கள் பிற இனத் தெய்வங்களை வழிபட்டு வந்தனர். ஆனால் யோசுவா 'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' என்ற உறுதியான முடிவை மக்களுக்கு கூறி அவர்களிடையே மன மாற்றத்தைக் கொண்டு வந்தார்.

'ஊழியம் புரிதல்' என்பது விடுதலைப் பயண நூலில் மிக முக்கியமான வார்த்தை. ஏனெனில், எகிப்தில் பாரவோனுக்கு ஊழியம் புரிந்துகொண்டிருந்த மக்களைத் தனக்கு ஊழியம் புரியமாறு அழைத்துச் செல்கின்றார் ஆண்டவராகிய கடவுள். ஆண்டவருக்கு ஊழியம் புரிவதை விடுத்து மற்ற தெய்வங்களுக்கு ஊழியம் புரிவது 'பிரமாணிக்கமின்மை' அல்லது 'விபசாரம் செய்தல்' என்ற பெரிய பாவமாகக் கருதப்பட்டது. இஸ்ரயேல் மக்கள் இரு நிலைகளில் உந்தப்பட்டு, 'நாங்கள் ஆண்ட வருக்கே ஊழியம் புரிவோம்' என்று சொல்கின்றனர்.

இரண்டாம் வாசகத்தில், புனிந பவுல் திருமண உறவுக்கு உதாரணமாக, கிறிஸ்து வைக் கணவர் என்றும், திருஅவையைக் மனைவி என்றும் உருவகமாகக் கூறுகின் றார். கிறிஸ்து திருஅவைக்காக தன்னையே ஒப்புவித்ததைப்போல் கணவர் மனைவிக் குத் தர வேண்டும். மேலும், அத்திருஅவை கறைதிறையோ, வேறு எக்குறையோ இல்லாமல் இருப்பதுபோல மனைவியும் பிளவுபடா உள்ளத்துடன் தன் கணவருக் குப் பணிந்திருக்க வேண்டும் என்று பணிக்கின்றார்.

நற்செய்தி வாசகத்தில், நாம் கடந்த நான்கு வாரங்களாகக் கேட்டு வந்த, 'வாழ்வுதரும் உணவு நானே' என்னும் இயேசுவின் பேருரை நிறைவுக்கு வருகின்றது.

இயேசுவின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக் கின்ற சீடர்கள், 'இதை ஏற்றுக்கொள்வது கடினம். இன்னும் கேட்டுக்கொண்டிருக்க முடியுமா?' என்று இடறல்படுகின்றனர். மூன்று காரணங்களுக்காக இயேசுவை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை: ஒன்று, நாசரேத்தூரில் பிறந்த ஒருவர் தன்னையே எப்படி வானினின்று இறங்கி வந்த உணவு என்று சொல்ல முடியும்? என்ற இடறல். இரண்டு, இயேசுவைப்




பின்பற்றுவதால் உடனடி பரிசு அல்லது வெகுமதி என்று எதுவும் இல்லை. மூன்று, அவர்கள் இயேசுவின்மேல் வைத்திருந்த எதிர்பார்ப்புகள் அனைத்தும் ஏமாற்றங் களாக முடிகின்றன.

இன்று, நமது நிலைபாடு என்ன? இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்கப்படுவர்' (மத் 10: 22) என்பார் இயேசு. ஆதலால், நாம் இறுதிவரை மன உறுதியுடன் ஆண்டவரில் நிலைத்திருந்து, அவருக்கு முழு உள்ளத்துடன் ஊழியம் புரிவோம். அதன்வழியாக இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

-ஆர்.கே

**பொதுக்காலம்-21-ஆம் ஞாயிறு**

முதல் வாசகம்: யோசு 4:1-2a,15-17,18b
திரு.பாடல் 34:1-2.15-16.17-18.19-20.21-22
2-ம் வாசகம் எபே 5: 21-32
நற்செய்தி யோவான் 6: 60-69

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**